செ.வெ.எண்: நாள்:02.07.2017

**நாமக்கல் மாவட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்வு எழுத விண்ணப்பித்திருந்த 7944 தேர்வர்களில் 7511 தேர்வர்கள் தேர்வு எழுதினர் - தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.ஆசியா மரியம் இ.ஆ.ப அவர்கள் இன்று (02.07.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து தகவல்.**

----------

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் முதுகலை பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை போட்டி எழுத்துத்தேர்வு இன்று (02.07.2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இத்தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.ஆசியா மரியம் இ.ஆ.ப அவர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நல்லிபாளையம், நாமக்கல் (வடக்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, நாமக்கல் (தெற்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, நாமக்கல் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.ஆசியா மரியம் இ.ஆ.ப அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.ஆசியா மரியம் இ.ஆ.ப அவர்கள் தெரிவித்ததாவது,

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் முதுகலை பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை போட்டி எழுத்துத்தேர்வு நாமக்கல் மாவட்டத்தில் இன்று (02.07.2017) நடைபெற்றது. நாமக்கல் மாவட்டத்தில் மொத்தம் 21 மையங்களில் இத்தேர்வு நடைபெற்றது. இத்தேர்வினை எழுதுவதற்கு விண்ணப்பித்திருந்த 7944 தேர்வர்களில் 7511 தேர்வர்கள் தேர்வு எழுதினர். 433 தேர்வர்கள் தேர்வு எழுத வருகை தர வில்லை.

இத்தேர்வினை நாமக்கல் மாவட்டத்தில் சிறப்பாக நடத்திட 4 வழித்தட அலுவலர்களும், 21 முதன்மை கண்காணிப்பாளரும், 21 கூடுதல் முதன்மை கண்காணிப்பாளரும், 21 துறை அலுவலர்களும், 21 கூடுதல் துறை அலுவலர்களும், உடல் பரிசோதகராக 84 ஆசிரியர்களும், 448 அறை கண்காணிப்பாளரும் என 620க்கும் மேற்பட்ட அலுவலர்கள் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.ஆசியா மரியம் இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி.ப.உஷா, நாமக்கல் வருவாய்க் கோட்டாட்சியர் திரு.மா.இராஜசேகரன், நாமக்கல் வருவாய் வட்டாட்சியர் திரு.இராஜகோபால், மாவட்ட கல்வி அலுவலர் திரு.அருளரங்கன் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு துறை, நாமக்கல்.